முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 8 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | வயது | : | 44 |
| தந்தை/கணவர் பெயர் | : | கண்ணன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 24.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பண்ருட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருக்கிறேன். பண்ருட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் நவீன் என்பவரை தெரியும். மற்ற இருவரை நான் பார்த்ததில்லை. 21.12.2018 ஆம் தேதி சுமார் 1.30 மணியளவில் காடாம்புலியூர் ஆய்வாளர் என்னை போனில் கூப்பிட்டார். நானும், என்னுடன் கிராம உதவியாளரும் சென்றோம். அங்கு 11.12.2018 அன்று நவீன் என்பவர் காலையில் கரையாம்புத்தூர் போனதாகவும், திரும்பி வரும்வழியில் பண்ருட்டி ஆர்டிஓ ஆபிஸ் எதிரில் அரசு பேருந்து வேகமாக வந்ததாகவும், இவர் மேல் உரசுவதுபோல் வந்ததாகவும், அதனால் காலில் அடிபட்டதாகவும், கோபமடைந்து எதிரில் வந்த பஸ்ஸை தாக்கியதாகவும்

சொன்னார். (எதிரிகள்தரப்பு ஆட்சேபணையோடு பதிவு செய்யப்படுகிறது) அரசுப்பேருந்தை கல்லால் அடித்ததாக சொன்னார். தனியார் பேருந்தான மீனாட்சி பேருந்தை கல்லால் அடித்ததாக சொன்னார். தாமரைக்குளம் அருகே அரசு பேருந்தை கல்லால் உடைத்தார். செல்வகுமார் என்ற தனியார் பேருந்தை கல்லால் உடைத்தார். பாவைகுளம் கிராமத்தை தாண்டி அரசு பேருந்து கண்ணாடியை உடைத்ததாக சொன்னார். பைக்கிலிருந்து கருங்கல்லையும், கண்ணாடிகுண்டையும் போட்டு கொண்டு போனதாக சொன்னார். கொள்ளுகாரன் குட்டை ஆஞ்சநேயர் கோயில் அருகில் மீதமுள்ள கற்களை வீசியெறிந்ததாக சொன்னார். அதன்பிறகு மண்பாதை வழியாக கிராமத்திற்கு போனதாக சொன்னார். காடாம்புலியூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளரிடம் என் முன்னிலையில் சொன்னார். சாட்சி ஒப்புதல் கொடுத்ததை என் முன்னிலையில் கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். என்னுடன் கிராம உதவியாளர் ராயரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் அசாஆ.4 ஆகும். (எதிரிதரப்பில் இந்த ஆவணம் ஜெராக்ஸ் என்பதால் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - ஆய்வாளர் போன் செய்யும்போது பகல் 1.00 மணி இருக்கும். நான் ஆய்வாளரிடம் செல்வதற்கு தாசில்தாரிடம் அனுமதி பெறவில்லை. தகவலும் சொல்லவில்லை. எனக்கு டைரி எழுதும் வழக்கம் இல்லை. ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலரும் மதியம் வரை அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்றும், வேறு

பணியாக செல்லும்போது நோட்டிஸ் போர்டில் எழுதவேண்டும் என்று சுற்றறிக்கை உள்ளது. காவல்நிலையத்திலிருந்து எங்கள் அலுவலகம் 500 மீட்டர் இருக்கும். நான் கால்மணி நேரத்தில் காவல்நிலையம் சென்று விட்டேன். நான் போய் அரை மணிநேரத்தில் என்னிடத்தில் கையெழுத்து வாங்கினார்கள். காவல்நிலையத்தில் மொத்தம் 3 கையெழுத்து போட்டேன். வாக்குமூலம் எழுதி கொண்டார்கள். டைப் செய்ததில்தான் நான் கையெழுத்து போட்டேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பமிட்டதை என் மேலதிகாரிகளுக்கு வாய்மொழியாக சொல்லியுள்ளேன். ஒப்புதல் வாக்குமூலம் 3 பக்கம் டைப் செய்தார்கள். ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையெழுத்து போட்டேன். எதிரி எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லைஎன்றாலும், காவல்நிலையத்தில் வைத்து காவல்ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - என்னிடம் காட்டப்படும் (A1, A2 ஒப்புதல் வாக்குமூலம் ) கையெழுத்து நவீன் ஒப்புதல் வாக்குமூலத்திற்காக போட்டேன். அது அசாஆ.5 ஆகும்.

குறுக்கு விசாரணை - இல்லை

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 256 /2019

அரசுதரப்பு 9-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராயர் | வயது | : | 63 |
| தந்தை/கணவர் பெயர் | : | மாயவன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 24.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது பணி ஓய்வு பெற்று கீழிருப்பு கிராமத்தில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. 21.12.2018 அன்று நானும், விஏஓவும் ஆபிஸில் இருந்தபோது காடாம்புலியூர் ஆய்வாளர் போன் செய்ததாகவும், என்னுடன் விஏஓவுடன் உடன் காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் பஸ்ஸில் குண்டு அடித்த பார்ட்டியை விசாரித்து கொண்டிருந்தார்கள். பஸ்ஸை குண்டால் அடித்த இடத்தை எங்களை கூப்பிட்டு போய் காட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் A3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து இல்லை. என்னிடம் காட்டப்படும் A1, A2 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும்

அசாஆ.6 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 21.012.2018 அன்று காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகளை பார்த்ததாகவும், அவர்கள் எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டேனா, எழுதிய பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் ஞாபகமில்லை. நானும், விஏஓவும் ஒன்றாக சென்றோம். அப்போது பகல் 1.00 மணி இருக்கும். நாங்கள் போனவுடன் என்னிடமும், விஏஓவிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

மறுவிசாரணை - இல்லை.